# அன்னையின் வாழ்த்து



அன்பான குழந்தைகளே! சிறுவர் அரங்கம் 4 - வது மலரின் மூலமாக உங்களை சந்திப்பதில் பெருமிதம் அடைகிறேன். இந்த இதழானது நாம் நடத்திவரும் மாலை நேர பள்ளி மற்றும் குழந்தைகள் பாராளுமன்றங்களின் செயல்பாடுகளை விவரிக்கிறது. குழந்தைகள் பாராளுமன்றங்களின் மூலமாக, குழந்தைப் பருவத்திலேயே அமைச்சர்களாகி, உங்கள் உரிமைகளைப் பெற அரசு அதிகாரிகளை சந்தித்து, ஜனநாயக ரீதியில் உங்களின் தேவைகளைப் பெற்று சிறந்த எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை உங்களுக்குள் ஏற்படுத்தி உரிமையை தட்டிக் கேட்டு அதைப் பெற்று, இதனால் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நின்று உத்தம குடிமக்களாக வாழ என்னுடைய வாழ்த்துக்கள்.

குழந்தைகளே இவ்விதழின் மூலம் உங்களின் படைப்புத்திறன், அறிவுத்திறன், உரிமைத்திறன் கண்டு வியக்கிறேன்! பாரட்டுகிறேன்! உங்களுக்குள் மறைந்திருக்கும் திறன்களை கண்டறிந்து வெளிக்கொணர முயற்சி செய்யுங்கள். நீங்கள் தான் "நாளைய தலைவர்கள்!!! நாட்டின் "முதுகெலும்பு" என்பதை மறந்து விடாதீர்கள். குழந்தைகள் பாராளுமன்றத்தின் ஆர்வமிகு செயல்பாடுகளும் "சிறுவர் அரங்கம்" 4 - வது மலர் சிறப்பாக வெளிவருவதற்கும் அதற்கு ஆதாரமாக விளங்குகின்றன. Auxillium ARUWYE-யின் இயக்குநர் அருட்சகோதரி காணிக்கை ராஜ் ஷெர்மிலா அவர்களின் ஆக்கமும் ஊக்கமும் விடா முயற்சியும் பாராட்டத்தக்கண. குழந்தைகள் மேல் உள்ள அக்கறையினால், அவரோடு சேர்ந்து பணியில் அயராது உழைக்கும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் என் பாராட்டுக்கள். "சிறுவர் அரங்கம்" மென்மேலும் வளர்ந்து பல்லாயிரம் சிறப்பு மலர்களாக வெளிவர வாழ்த்துகிறேன்.

Sr. Nirmala Lazar.

அருட்சகோதரி. நிர்மலா லாசர்
சென்னை மாநிலத் தலைவி

# அருட்சகோதரியின் அறிமுகம்



அன்பார்ந்த குழந்தைகளே! சிறுவர் அரங்கம் 4-வது மலர் உங்கள் கரங்களில் தவழுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இம்மலரானது குழந்தைகளால் குழந்தைகளுக்காக அவர்களது புதிய புதிய படைப்புகளை, புதிய உத்திகளை கையாண்டு உருவானது. அவர்களின் உள்ளக் குமுறல்கள் கதைகளாக, ஓவியங்களாக வெளிவருகின்றன. ஒவ்வொருவரின் படைப்பாற்றலும் அவர்களின் கடமை உணர்ச்சிகளையும், பொறுப்புகளையும் ஒளிரும்படி, மிளிரும்படி, வெளிச்சம் போட்டுக் காட்டுவது தான் சிறுவர் அரங்கம்.

குழந்தைகளின் பாராளுமன்றத்தில் தன் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்கின்றனர். தனது கடமை என்ன? உரிமை என்ன? எதை எப்படி பெறுவது? என சிந்திப்பதால் சிந்தனை சக்தி வளர்கிறது.

தன்னையும் காத்துக்கொண்டு, மற்ற மாணவர்களுக்கும் பாதுகாப்பு தருகின்றார்கள். தன் கண் முன்னே நடக்கும் அநியாயங்களை தட்டிக் கேட்பவர்களாய் மாறிவிடுகிறார்கள். தானும் நேர்மையாக வாழ கற்றுக்கொண்டு மற்றவர்களுக்கும் நேர்மை, உண்மையை, காந்தியடிகளை போன்று கற்றுத் தருபவர்களாய் மாறிவிடுகின்றனர்.

நான், எனது மனமார்ந்த நன்றியை பாசமிகு சென்னை மாநிலத் தலைவி அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் சிற்பியாய் இருந்து எங்களை செதுக்குகிறார்கள். தனது அன்பால், பாசத்தால், அரவணைப்பால் எங்களை தட்டிக் கொடுத்து வளர்த்து வருகிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு தான் நன்றி கூறினாலும் மிகையாகாது.

இம்மலரானது சிறப்பாக வெளிவர எங்களது குழு உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் அனைவரும் விடா முயற்சியுடன் அல்லும் பகலும் உழைத்து வருகின்றார்கள். அனைவருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

Sr. Sharmila

அருட்சகோதிரி. காணிக்கை ராஜ் ஷெர்மிலா
இயக்குனர், ARUWYE

# மசரெல்லோ மடம் மைக்கேல்புரம்
# குழந்தைகள் பாதுகாப்பிற்கான பயிலரங்கம்

இப்பயிலரங்கம் குழந்தைகள் தங்களை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் மற்றும் சமூக ரீதியாகவும் எவ்வாறு தங்களை பாதுகாத்துக் கொள்வது என்பதை பற்றி பல கோணங்களில் அக்டோபர் 25, 2017 அன்று மைக்கேல்புரம் (விழுப்புரம்) அரசு பள்ளியில் 75 குழந்தைகளுக்கு பயிற்றுவிக்கப்பட்டது. கடந்த சில தினங்களாக தமிழகத்தில் குழந்தைகள் வன்முறை என்பது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இதனை மையமாகக் கொண்டு இப்பயிலரங்கமானது நடத்தப்பட்டது.

குழந்தைகள் தனித்துவம் வாய்ந்தவர்கள் என்பதால் குழந்தை உரிமைகள் அவர்களுக்காக எழுதப்பட்டன. எனவே குழந்தை உரிமையும் மனித உரிமையே. தொன்றுதொட்டு குழந்தை தொழிலாளர்கள், சிசுக்கொலை, குழந்தை திருமணம் போன்ற பிரச்சனைகள் நடந்து கொண்டே இருக்கிறது. குறிப்பாக வீட்டின் வறுமை காரணமாகவும் மற்றும் பொருளாதார காரணத்திற்காக குழந்தைகள் வேலைக்கு செல்வதற்கான கட்டாயம் ஏற்ப்படுகிறது. எனவே எவ்வாறு இப்பிரச்சனையிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வது என்பதை தெரிந்து கொண்டார்கள். இந்த சமூகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் அந்த சமூகத்தில் உள்ள குழந்தைகளை பாதுகாக்கும் உரிமை உள்ளது. அப்படி நாம் செய்யாதப் பட்சத்தில் நாமும் குற்றவாளிகளே.



# திரு இருதய இல்லம், காட்பாடி

பிஞ்சு முகம்

வெள்ளை புன்னகை

விருப்பும் மகிழ்ச்சி

கள்ளமில்லா உள்ளம்

எத்ததனை எத்தனை

நினைவுகள்.. !

குழந்தைகள் தின விழா இந்தியா முழுவதும் நவம்பர் மாதம் 14 - ம் தேதி கொண்டாடப்படுகிறது. வெள்ளை மனம் கொண்டவர்கள் குழந்தைகள். அவர்கள் விறுப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டவர்கள். பல குழந்தைகளுக்கு இந்தியாவில் ஏன் இந்த குழந்தைகள் தின விழாவை கொண்டாடுகிறோம், என்பதை அறியாமலே இருக்கிறார்கள். உலகில் சிறப்பு வாய்ந்த தினங்களில் மிகவும் முக்கியமானது குழந்தைகள் தினம். எதிர்காலத்தில் உலகையே ஆளப்போகிறவர்கள் என்று பெரியவர்கள் கூறும் குழந்தைகளை மகிழ்விப்பதற்காக கொண்டாடப்படும் தினம், குழந்தைகள் தினம். உலகிலேயே அதிக அளவிலான குழந்தைகளைக் கொண்ட நாடுகளில் முக்கியமான நாடாக இந்தியா விளங்குகிறது. இந்தியாவில் குழந்தைகள் மீதான வன்முறைகள் அதிகரித்து வருகிறது. இந்த வன்முறை இல்லாது அனைத்து குழந்தைகளும் அடிப்படை கல்வி பெற்று முழு பாதுகாப்புடன் அனைத்து உரிமைகளை பெற வேண்டும் என்பதே குழந்தைகள் தின விழாவின் நோக்கம்.

குழந்தைகளை வளர்க்கும் போதும் உருவாக்கும் போதும் பெற்றோர்கள் அவர்களோடு இருந்து அவர்களாகவே மாறினால் தான் அவர்களை சிறந்தவர்களாக உருவாக்க முடியும்.

குழந்தைகள் முன்னேற அவர்கள் குழந்தைப் பருவத்தில் கற்றுக் கொள்வது தான் வழிவகுக்கிறது. குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை புகட்ட வேண்டும். குழந்தைகளை மற்ற குழந்தைகளுடன் பழக விட வேண்டும். அப்போது தான் சகோதரத்துவமும், உதவும் மனப்பான்மையும் வளரும்.

ஒவ்வொரு குழந்தைகளின் கனவுகளை அறிந்து இச்சமூகம் நிறைவேற்ற முற்பட வேண்டும். குழந்தைகளின் ஆர்வத்தையும், ஆசைகளையும், அனுபவத்தையும், அணுகுமுறையும், மனநிலைகளையும் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்த அணுகுமுறைகள் குழந்தைகளின் ஆக்கப்பூர்வமான சாதனைக்கு அடிப்படையாக அமையும்.

ARUWYE (INM) கடந்த 10 வருடமாக தமிழகத்தில் சிறப்பாக 5 மாவட்டங்களில் தங்கள் பணிகளை குழந்தைகளின் நலனுக்காக தொடர்ந்து பணியாற்றி வருகிறது. அதன் விளைவாக கடந்த நவம்பர் மாதம் 2017 ஆண்டு விழுப்புரம், வேலூர்,ஈரோடு, சென்னை மற்றும் திருவண்ணாமலை பகுதிகளில் குழந்தைகள் தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதில் கட்டுரை போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப்போட்டி, விடுகதை

போட்டி மற்றும் விளையாட்டு போட்டிகள் அவர்கள் திறன்களை வளர்த்தெடுக்கும் விதமாக நடத்தப்பட்டது. குழந்தைகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. மேலும் குழந்தைகளின் நலனின் நாங்கள் அக்கறைக் கொண்டு அவர்களின் வளரச்சிக்காக தொடர்ந்து பணியாற்றும் ஆற்றலையும், வலிமையையும், உற்சாகத்தையும் பெற்று குழந்தைகளுக்கு தைரியம் மற்றும் நம்பிக்கை ஊட்ட வேண்டும்.





# ஈரோடு மரியாலயா குழந்தைகள் பாராளுமன்றம்

குழந்தைகள் பாராளுமன்ற பயிற்சி 27-09-2017 மற்றும் 29-09-2017 நாட்களில் ஈரோடில் நடத்தப்பட்டது. குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஊட்டவும், தலைமைத்துவ பண்புகளை வளர்த்தெடுக்கவும், ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக மற்றும் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாக உருவாக்கவும் ஏற்படுத்படுத்தப்பட்டது. 10 வயது முதல் 16 வயது வரை உள்ளவர்கள் குழந்தைகள் பாராளுமன்றத்தில் பங்கு கொள்ளலாம். குழந்தைகள் பாராளுமன்றத்தில் 12 முதல் 20 நபர்கள் இருக்கலாம்.

## உறுப்பினர்களின் பணிகளும் செயல்பாடுகளும்

### பிரதமர்

பாராளுமன்றத்தின் தலைவர், பாராளுமன்றத்தை வழிநடத்துபவர் அனைத்து ஆவணங்களிலும் கையொப்பமிடும் அதிகாரம் கொண்டவர். ஒவ்வொரு கூட்டத்திற்கும் சபாநாயகரை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பிரதமருக்கு உண்டு.

### துணைப்பிரதமர்

பிரதமர் தன் கடமைகளை சிறப்பாக செய்ய உடனிருந்து செயல்படுபவர். பிரதமர் வரமுடியாத சூழ்நிலையில் அவருக்கு பதிலாக செயல்படுபவர்.



| வ.எண். | மாவட்டம் | குழந்தைகள் பாராளுமன்றம் | குழந்தைகளின் பங்கு |
|---|---|---|---|
| 1 | சென்னை | கோடம்பாக்கம் குழந்தைகள் பாராளுமன்றம் | 8 |
| 2 | வேலூர் | திருவள்ளுவர் குழந்தைகள் பாராளுமன்றம் | 12 |
| | | அண்ணாநகர் குழந்தைகள் பாராளுமன்றம் | 12 |
| | | சேர்காடு குழந்தைகள் பாராளுமன்றம் -1 | 12 |
| | | சேர்காடு குழந்தைகள் பாராளுமன்றம் -2 | 12 |
| 3 | திருவண்ணாமலை | அன்மருதை குழந்தைகள் பாராளுமன்றம் | 16 |
| | | ஆவன்யாபுரம் குழந்தைகள் பாராளுமன்றம் | 14 |
| | | அவியந்தாங்கள் குழந்தைகள் பாராளுமன்றம் | 12 |
| 4 | விழுப்புரம் | தாமஸ் நகர் குழந்தைகள் பாராளுமன்றம் | 8 |
| | | பெரியநாயகி நகர் குழந்தைகள் பாராளுமன்றம் | 12 |
| | | சவேரியார்பாளையம் குழந்தைகள் பாராளுமன்றம் | 12 |
| | | மைக்கேல்புரம் குழந்தைகள் பாராளுமன்றம் | 8 |
| 5 | ஈரோடு | சேமூர் குழந்தைகள் பாராளுமன்றம்-1 | 12 |
| | | சேமூர் குழந்தைகள் பாராளுமன்றம்-2 | 12 |
| | | பச்சப்பாளி குழந்தைகள் பாராளுமன்றம் | 12 |
| | | பெரியார் நகர் குழந்தைகள் பாராளுமன்றம் | 16 |

## உள்துறை அமைச்சர்

பாராளுமன்ற கூட்டங்களை கூட்டுதல், அறிக்கை எழுதுவது. அறிக்கை வாசிப்பது, வருகைப்பதிவேடு கணக்கெடுப்பு, மனித உரிமை மீறல் மற்றும் குழந்தைகள் உரிமை மீறல் இவற்றை கண்காணித்தல். பாராளுமன்றத்திற்குரிய பொருட்கள், கோப்புகள், அறிக்கைகள், தீர்மான நகல்கள் போன்ற அனைத்தையும் சரியாக பராமரித்தல்.

## நிதித்துறை அமைச்சர்

அரசு நிதி ஒதுக்கீடு பற்றிய தகவல்கள் சேகரித்து பாராளுமன்றக் கூட்டத்தில் வாசித்தல். துறை சார்ந்த பணிகளுக்கு நிதி ஒதுக்குதல், கலை நிகழ்ச்சிகள், பயிற்சி வகுப்புகள் மற்றும் சுற்றுலா செல்ல நிதி அளிப்பது. பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி பங்களிப்பு எவ்வளவு என்பதை கலந்தாய்வு செய்தல். கூட்டங்களில் வரவு செலவு கணக்கு வாசித்தல் ஒப்புதல் பெறுவது. பாராளுமன்றம் வங்கி கணக்கு தொடங்குமேயானால், அது சம்மந்தமான Bank Pass Book, Check Book Maintain செய்வது, Income Expenditure Account Book Voucher Book, Daily Cash Book, Inventory Book Maintain செய்வது.

## கல்வித்துறை அமைச்சர்

சத்துணவு கல்விப் பற்றிய பிரச்சனைகள் பற்றி பேசுதல். அனைவருக்கும் கட்டாய இலவச கல்வி உறுதிப்படுத்துதல். பள்ளி செல்வோர் செல்லாதோர் பற்றிய புள்ளி விவரங்கள் வைத்திருத்தல். பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இருக்க நடவடிக்கை, குழந்தைகள் அங்கன்வாடி செல்ல பெற்றோர்களை சந்தித்து பேசுதல். குழந்தைகள் வீட்டிலும், பள்ளியிலும் சுதந்திரமாக படிக்க முயற்சி. குழந்தைகள் கால அட்டவணையிட்டு படிக்க உதவி, ஊர்களில் படிப்பகம் அமைக்க முயற்சி, வகுப்பில் பின் தங்கிய மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி, உள்ளூர் பள்ளிக் கல்வி நிலை பற்றி அறிக்கை சமர்ப்பித்தல் ஆகியனவாகும்.

## சுகாதாரத்துறை அமைச்சர

பொது இடங்களை சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கை, கழிவுகள் குப்பைகள் அகற்றுதல், வடிகால் அமைத்தல். ஊரின் அல்லது சுற்றுப்புறத்தின் சுகாதார புள்ளி விவரங்கள் சேகரிப்பது சுற்றுப்புறத் தூய்மை பற்றிய விழிப்புணர்வு, கழிவறை உபயோகத்தின் முக்கியத்துவம் பற்றி பேசுதல். ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்வையிட்டு அறிக்கை அளித்தல். பள்ளியில் உள்ள விளையாட்டு மைதானம், கழிப்பறை, வகுப்பறை சுத்தமாக இருக்க நடவடிக்கை, குழந்தைகள் சுத்தமான பள்ளி சீருடை, காலனி அணிந்து செல்ல நடவடிக்கை.

## சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

தங்கள் ஊரிலுள்ள மரங்கள், செடிகள் ஆகியவற்றை அழிக்காமல் பாதுகாத்தல். வீட்டின் கழிவுநீரை பயன்படுத்தி தோட்டம் அமைத்தல். பிளாஸ்டிக்-பாலீத்தீன் பொருட்கள் உபயோகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல். இயற்கை வளங்கள் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல். காற்று மாசுபடுதல் மற்றும் பூமி வெப்பமாதல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல், எரிபொருட்கள் அதிகம் பயன்படுத்தாமல் இருக்க நடவடிக்கை எடுத்தல். வெடிக்கு பதில் ஏழைக்கு துணி மற்றும் பள்ளி கட்டணம், மரம் நடுதல்.



இரண்டு வகையான கழிவுகள்,

1. மக்கும்
2. மக்காத

கழிவுகளை பிரித்து வைப்பதன் அவசியத்தை உணர்த்துவது. பறவைகள், விலங்குகள் பராமரிப்பின் அவசியம் பற்றி உணர்த்துதல்.

## விளையாட்டுத் துறை அமைச்சர்

ஊரில் பள்ளிகளில் விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா அமைய முயற்சி. பள்ளிகளில் போதுமான விளையாட்டு பொருட்கள் வாங்க ஏற்பாடு செய்வது. அவற்றை பராமரிப்பது. பயன்படுத்துவது விளையாட்டு ஆசிரியர் பணி அமர்த்த நடவடிக்கை எடுப்பது. பல்வேறு கிராமத்து விளையாட்டுகளை ஊக்குவிப்பது. விளையாட்டு தினம் ஏற்பாடு செய்வது. மாற்று திறனாளிகள் விளையாடி மகிழ ஊக்குவிப்பது.

## கலை மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர்

கலைஞர்களை ஊக்குவிப்பது, விழாக்களின்போது கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வது மற்றும் தலைமை ஏற்று நடத்துவது. கலை பயிற்சிகள் ஏற்பாடு செய்வது. பள்ளிகளில் மாணவர் ஒழுக்கம் பற்றியும், பெற்றோர்களிடத்தில் குழந்தைகள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பது பற்றியும் பேசுதல். இந்திய கலாச்சாரம், பண்பாடு பற்றிய உரை நிகழ்த்துவது. இந்திய கலாச்சாரம், பண்பாட்டு மேம்பாட்டிற்கு குழந்தைகள் பங்கேற்பு என்ன என்பதை உணர்த்தவது. கைவினைப்பொருட்கள் கண்காட்சி மற்றும் விற்பனைக்கு ஏற்பாடு செய்தல்.

## சட்டத்துறை அமைச்சர்

சட்டத்தை மதிப்பதில் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பது. பயனுள்ள சட்டங்கள் இயற்ற ஆலோசனை வழங்குவது. குழந்தைகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர் கடமைகள் என்ன என்பதை எடுத்து கூறுவது. சட்டம் பற்றிய அனைத்து தகவல்களையும் சேரித்து கூட்டத்தில் வாசிப்பது. குழந்தை உரிமை மீறல்களை எதிர்த்து போராட்ங்கள் நடத்த முயற்சி எடுப்பது. Police Helpline -100 & Child Helpline 1098 எப்படி கையாள்வது பற்றி விழிப்புணர்வு.

## போக்குவரத்துத் துறை அமைச்சர்

சாலை விதிகளை கடைபிடிப்பது. சாலை விதிகள் பற்றிய கருத்தரங்கு ஏற்பாடு செய்வது. சாலைகள் பராமரிப்பது. பேருந்து போக்குவரத்து சீராக இயங்க நடவடிக்கை எடுப்பது. இலஞ்சம் ஒழிக்க நடவடிக்கை எடுப்பது. பள்ளிகளில் இலவச பேருந்து அட்டை வழங்க ஏற்பாடு. மாணவர்களுக்கு தனி அரசு பேருந்து இயக்க ஏற்பாடு செய்வது.

## தகவல் தொடர்புத்துறை அமைச்சர்

தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செய்திகள் சேகரித்து வழங்குவது. கிடைத்த பொது அறிவை பகிர்ந்து கொள்வது. செய்திகள் சேகரித்து வாசிப்பது. அமைச்சர்களிடையே தகவல் பரிமாறிக் கொள்வது. கைபேசி உபயோகம் பற்றிய விதிகள் நடைமுறைப்படுத்தவது. தொலை தொடர்பு சாதனங்கள் பற்றிய கருத்தரங்கு நடத்வது. New Article, Journals தயார்



செய்து பாராளுமன்ற செய்திகளை செய்திதாள்களுக்கு வழங்குது. புகைப்படங்கள், அரிய பொருட்கள், செய்திகள், கலைப்படைப்புகள், விழிப்புணர்வு சுவரொட்டிகள் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்வது.

### பெண்கள் மற்றும் குழந்தைகள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

வரதட்சனை கொடுமை தடுத்தல். பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு அளித்தல். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகளை தடுத்தல். பெண்கள் சம உரிமை பற்றி பேசுதல். குழந்தை வளர்ப்பு கருத்தரங்கு நடத்துவது.

### மாற்றுத்திறனாளிகள் துறை அமைச்சர்

மாற்றுத் திறனாளிகள் தங்கள் உரிமைகள் அரிய, அரசு ஆவணங்களில் பதிவு செய்ய உதவி, தடையற்ற சூழல் உருவாக்குவது. பெற்றோர்களை ஊக்குவிப்பது.

### விவசாயத்துறை அமைச்சர்

விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றி பேசுவது. இயற்கை உரங்கள் பயன்பாட்டை அதிகரிப்பது. உள்ளூர் விவசாயத்தை மேம்படுத்த முயற்சி. விவசாய தொழிலாளர்கள் நலனுக்காக நடவடிக்கை, மழைநீரை எவ்வாறு சேகரிப்பது மற்றும் கையாள்வது பற்றிய கருத்தரங்கு. மண் அரிமானம் தடுக்க நடவடிக்கை எடுத்தல்.

## குழந்தைகள் பாதுகாப்பு கோட்பாடுகள் - பயிற்சி

சென்னை மண்டலத்திலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் குழந்தைகள் பாதுகாப்பு கோட்பாடுகள் பற்றிய பயிற்சி கோடம்பாக்கம் சென்னையில் 20.60.2017 அன்று வழங்கப்பட்டது. அருட்சகோதரி சர்மிளா அவர்கள் குழந்தைகளின் வளர்ச்சி நிலை பற்றியும், அவர்களை வழிநடத்தும் முறை பற்றியும் பயிற்றுவித்தார். இந்த பயிற்சியின் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் குழந்தைகள் பாதுகாப்பு குழு அமைக்கப்பட வலியுறுத்தப்பட்டது.

## அன்மருதை மரம் நடுவிழா



திருவண்ணாமலை அன்மருதை பாராளுமன்ற குழந்தைகள் அவர்கள் சுற்றுப் புறத்தில் மரம் நடு விழாவை கொண்டாடினார்கள். அருட்சகோதரி. Y. L. மார்கரெட் மாலை நேர வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் ஊர் தலைவர் ஒத்துழைப்பில் மரக்கன்றுகளை நட்டனர். காடு மற்றும் மரங்களின் நன்மைகள் குறித்து குழ்நதைகள் தங்கள் கருத்துக்களை மற்றவர்களோடு பகிர்ந்துக் கொண்டார்கள்.

12.06.2017 அன்று மாலை 4.30 மணியளவில் ஆவணியாபுரம் கிராமத்திலுள்ள மாலை நேர வகுப்பு மையத்தில் உலகச் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டது. இத்தினத்தை அருட்சகோதரி. Y. L. மார்கரெட் தலைமையேற்று நடத்தினார்கள். சுற்றுப்புறத் துய்மை, தன் சுத்தம், மரங்களின் பயன்கள் குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது. மரங்களை நடுவதால் ஏற்படும் நன்மைகளை எடுத்துக் கூறியதால் உற்சாக மடைந்து மரக்கன்றுகளை நட்டனர். இனிமேல் சுற்றுப்புறத்தையும், வீட்டையும் சுத்தமாக வைத்துக் கொள்வதோடு அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடம் இதை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உத்தி எடுத்தார்கள். பொது மக்களும் பெற்றோர்களும் இதற்கு ஆதரவு கொடுத்தார்கள்.

17.06.2017 அன்று அன்மருதை வளாகத்தில் அருட்தந்தை. ஆரோக்கிய தாஸ் அவர்கள் தலைமையில் மாலை நேர வகுப்பு மையங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு புத்தொளி பயிற்சியானது துவங்கப்பட்டது. இப்பயிற்சியில் ஆசிரியர் பணி என்பது அழைப்பு பணி, அன்புப் பணி, இப்பணியை பணம், பயம், பிரச்சனைகளின் மையமாக பாராமல் உறவின் அடிப்படையில் கருப்பொருளாக பார்க்க வேண்டுமென்றும் ஆசிரியர்கள் தன்னைத் தானே முழுமையாக புரிந்துக் கொண்டு குழந்தைகளின் மன நிலை, குடும்பச் சூழ்நிலை ஆகியவற்றை அறிந்து குறிப்பாக அவரது கருத்துக்களை நன்கு கவனித்து அதற்கேற்றவாறு வழிநடத்தி எதிர்காலத்தில் சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று கூறினார்கள்.

20.6.2017 அன்று காலை 10.30 மணியளவில் அன்மருதை வளாகத்தில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் அருட்சகோதரி. Y. L. மார்கரெட், திருமதி. காணிக்கை மேரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. குழந்தைகளை எவ்வாறு பேணி காக்க வேண்டுமென்று, வளர்ப்பு முறைகளைப் பிரச்சனைகள் அணுகுமுறைகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டது. அனைத்து கிராமங்களிலிலுள்ள மாலை நேர வகுப்பில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர். 750 பேர் வருகை தந்தனர். இந்த மாலை வகுப்பில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் ஒழக்கத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்குவதாக பெற்றோர்கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

15.08.2017 அன்று காலை 9.30 மணியளவில் வெங்கடேசன்பட்டி கிராமத்தில் சுதந்திர தின விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு அருட்சகோதரி. விஜி, அருட்சகோதரி. ப்ரீத்தி, ஊ.ஒ.ப. தலைமையாசிரியர் திரு. ஏழுமலை, உதவி ஆசிரியர், திரு. ரமேஷ் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. தேசிய கொடியை ஏற்றி அதற்கேற்ப மரியாதையும், தேசப்பற்றினை வெளிப்படுத்தும் வகையில் மா. நே. வகுப்பு மாணவ, மாணவிகள் கலை நிகழ்ச்சிகளின் வாயிலாக தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். அருட்சகோதரி. Y.L. மார்கரெட் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாற்றினைப் பற்றி எடுத்துக்கூறி உண்மை, சமாதானம், ஒற்றுமை, ஒழுக்கம், கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமென்று கூறி இனிப்புகள் வழங்கி விழா இனிதே நிறைவு பெற்றது.

27.08.2017 அன்று அனல் பெண்கள் முன்னேற்ற சங்க வளாகத்தில் ஆண், பெண் சமத்துவ பயிற்சி முகாம் நடைபெற்றது. இப்பயிற்சியினை அருட்சகோதரி. நிர்மலா, அருட்சகோதரி. Y.L.மார்கரெட் பொறுப்பேற்று வழி நடத்தினார்கள். பயிற்சியாளராக திரு. செந்தில் ராஜா வருகை தந்து பெண்களுக்கு சமூகத்தில் இழைக்கப்படும் கொடுமைகள் குறித்தும்,அதற்கான காரணம், தடுப்பு முறைகளைப் பற்றி பகிர்ந்து கொண்டார்கள். குழந்தைகளுக்கான உரிமைகள், பெண் குழந்தைகள் பாதுகாப்பு பற்றியும் எடுத்துக் கூறினார்கள். மகளிர் குழு பிரதிநிதிகள் 38 பேர் பங்கு பெற்றனர்.

06.12.2017 அன்று மதியம் 2 மணியளவில் அனல் பெண்கள் முன்னேற்ற சங்க அலுவலகத்தில் அருட்சகோதரி சர்மிளா அவர்கள் வருகை தந்து ஆங்கிலத்தில் எப்படி எளிமையாக பேசவேண்டுமென்றும், உறவு முறைகள் பற்றியும், மற்றவர்களோடு எப்படி உரையாடுவது என்பது பற்றியும், எளிமையான வார்த்தைகளை எப்படி உச்சரிப்பது என்றும், மாலை நேர வகுப்பு ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தார்கள். மேலும் அனைத்து ஆசிரியர்களையும் ஆங்கிலத்தில் பேச வைத்தார்கள். நம்மிடம் வரும் குழந்தைகளை புரிந்து கொண்டு அன்புடனும் சூழ்நிலைக்கேற்றவாறு அவர்களின் மனநிலைக்கேற்றவாறு கொடுக்க வேண்டுமென்றும், பாகுபாடின்றி வழி நடத்த வேண்டுமென்றும் எடுத்துக் கூற இப்பயிற்சி இனிதே நிறைவு பெற்றது.

## மாலை நேர வகுப்புகள்

சென்னை மண்டலத்தில் மொத்தம் 47 மாலை நேர வகுப்புகள் ஐந்து மாவட்டங்களில் (சென்னை, வேலூர், ஈரோடு, விழுப்பும் மற்றும் திருவண்ணாமலை) உள்ளது. 1367 குழந்தைகள் மாலை நேர வகுப்புகள் மூலம் பல பயன்களை பெறுகிறார்கள். மாலை நேர வகுப்புகளில் பாடம், விளையாட்டு, அறிவு சார்ந்த பயிற்சிகள், விழிப்புணர்வு பயிற்சிகள், கலந்துரையாடல்கள், குழந்தைகள் பாராளுமன்றம் மற்றும் தலமைத்துவ பண்புகள் பற்றி குழந்தைகள் அறிந்து கொள்கிறார்கள். மாலை நேர வகுப்பு ஆசிரியர்கள் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளுக்குச் சென்று குழந்தைகளின் வளர்ச்சியைப் பற்றி அறிந்துக் கொள்கிறார்கள். குழந்தைகளின் பெற்றோர்களை குழுவாகவோ அல்லது தனியாகவோ சந்தித்து அவர்களின் வளர்சசியைப் பற்றி தெரியப்படுத்துகிறார்கள். குழந்தைகளின் திறன்களை வளர்க்கும் விதமாக கட்டுரை போட்டி, கவிதை போட்டி, விடுகதை போட்டி, ஓவியப்போட்டி கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகிறது.



## குடியிருப்பு முகாம்

மே மாதம் 2017 குடியிருப்பு முகாம் ஐந்து நாட்கள் மூன்று மாவட்டங்களில் (சென்னை, வேலூர், திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர்) சென்னை மண்டலத்தில் நடத்தப்பட்டது. 240 குழந்தைகள் இதன் மூலம் பல அறிவு சார்ந்த விஷயங்களை கற்றுக்கொண்டார்கள். அவர்களின் திறன்களை பல நிகழ்ச்சிகளின் மூலம் வெளிக்கொணர்ந்தார்கள். அவர்களை உற்சாகம் ஊட்டும் விதமாக குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## அறிவியல் சார்ந்த பயிற்சி

அறிவியல் சார்ந்த பயிற்சி மூன்று மாவட்டங்களில் (சென்னை, வேலூர், திருவண்ணாமாலை மற்றும் திருப்பத்தூர்) இருபது நாட்கள் சென்னை மண்டலத்தில் நடத்தப்பட்டது. 600 குழந்தைகள் இதன் மூலம் அறிவியல் சார்ந்த தொழில் நுட்பங்களைப் பற்றியும் செய்முறைகள் பற்றியும் கற்றுக்கொண்டனர். இயற்பியல், வேதியல், உயிரியல் மற்றும் தாவரவியல் சம்மந்தமான செய்முறைப் பற்றி சிறந்த பயிற்சியாளர்கள் மூலம் கற்றுக்கொடுக்கப்பட்டது.

## அறிவியல் கண்காட்சி

மே மாதம் 2017 அறிவியல் கண்காட்சி மூன்று மாவட்டங்களில் (சென்னை, வேலூர், திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர்) சென்னை மண்டலத்தில் நடத்தப்பட்டது. 600 குழந்தைகள் அறிவியல் சார்ந்த தொழில் நுட்பங்களைப் பற்றி தெரிந்து கொண்டனர். இயற்பியல், வேதியல், உயிரியல் மற்றும் தாவரவியல் சம்மந்தமான செய்முறைப் பற்றி சிறந்த பயிற்சியாளர்கள் மூலம் காட்சிப்படுத்தப்பட்டது.

## கட்டுரை

## குழந்தைகளின் கல்வி உரிமை

### முன்னுரை

கல்வி, மக்களை பிற உயிரினங்களில் இருந்து வேறுபடுத்தி காட்டுகிறது. கல்வி மனிதனை மனிதனாய் விளங்கச் செய்கிறது. அத்தகைய கல்வியைப் பெறும் உரிமை குழந்தைகளுக்கு அரசு சட்டப்படி கொடுத்துள்ளது. நாட்டு மக்கள் யாவருக்கும் கல்வி அளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. கட்டாய இலவசக் கல்வி வழங்கும் திட்டமே, அனைவருக்கும் கல்வி திட்டமாகும்.

### திட்டத்தின் குறிக்கோள்

பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் 2000ஆம் ஆண்டிற்குள் பள்ளியில் சேர்த்தல் அவர்கள் அனைவரையும் இடைநிறுத்தமின்றி 2010ல் எட்டாம் வகுப்பு வரை வெற்றி கரமாய் முடிக்க செய்தல். வாழ்க்கைக்கு உகந்த தரமான கல்வியை உறுதி செய்தல். சமூகம் ஆண், பெண் இன வேறுபாடுகளின்றி. அனைவருக்கும் தரமான கல்வியைத்தருவதுடன், பள்ளிக்குத் தேவைப்படும் கட்டட வசதி, குடிநீர், கழிப்பறை வசதி, கற்றல் கற்பித்தல் பொருள்கள் வழங்கும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி வழங்குதல் ஆகியவையும் இத்திட்டத்தில் அடங்கும்.

## திட்டச் செயல்முறைகள்

அனைவருக்கும் கல்வி திட்டத்தின்படி செய்யவேண்டிய பணிகள் நாடு முழுவதும் கணக்கெடுப்பு ஆய்வு மூலம் தொடுக்கப்பட்டன. இப்பணிகள் சிறப்பாய் நடந்திட கிராம கல்விக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

சமூக, பொருளாதாரத்தில் பின் தங்கிய குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்க்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது. மனம், உடல் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு வசதி செய்துதருவதும் இத்திட்டத்தில் அடங்கும். மழலையர் பள்ளிகள் இல்லாத இடங்களில் புதிய மழலையர் பள்ளிகளை அமைதல், விளையாட்டு பொருள்களை வழங்குதல். பயிற்சி கொடுப்பவருக்குப் பயிற்சியளித்தல் போன்றவற்றிற்கும் இத்திட்டம் வகை செய்கிறது.

## முடிவுரை

அனைவருக்கும் கல்வி அளிக்கும் திட்டம், குழந்தைகளின் கல்வி ஆசிரியர் பயிற்சி, பள்ளியின் அடிப்படை வசதி ஆகிய மூன்றையும் ஓரே நேரத்தில் செய்து வருகின்றது. இத்திட்டம் மக்களுக்கு வளமான வாழ்வளிக்கும் திட்டமாகும்.

**எஸ் தென்றல்,** 7ஆம் வகுப்பு, திருவண்ணாமலை

# பெண்கள் மீதான வன்முறை வடிவங்கள்

- **பிறப்புக்கு பின்:**

  கருக்கலைப்பு, கருவுற்ற நிலையில் அடித்தல், பாலியில் பலாத்காரம்

- **குழந்தை**

  சிசுக்கொலை, திட்டுதல், உணவு மருத்துவத்தில் காட்டப்படும் பாகுபாடு

- **பெண் குழந்தை**

  குழந்தை திருமணம், அந்நியர் ஆளுதல், குடும்பத்தாரால் பாலியல் பலாத்காரம், குழந்தை விபச்சாரம்.

- **இளம் பெண்**

  காதலிப்பதாகச் சொல்லி ஏமாற்றுதல், பொருளாதார ரீதியாகச் சுரண்டல், பணியிடங்களில் வன்முறை, பாலியல் பலாத்காரம், கட்டாய விபச்சாரம், கடத்துதல்.

- **மனைவி**

  நெருக்கமான ஆண்களால் ஏமாற்றம், பலாத்காரம், வரதட்சனை, கொலை, வன்முறை பணி இடங்களில் பாலியல் வன்முறை, உடல் ஊனமுற்றோர் மீது காட்டப்படும் பாலியல் வன்முறை.

- **முதுமை**

  விதவைகள் மீது காட்டப் பெறும் அவதூறு மற்றும் பாகுபாடு.

**ம. லாவண்யா,** 8ஆம் வகுப்பு, வேலூர்

# குழந்தைகளின் கல்வி உரிமை

## முன்னுரை

குழந்தை என்ற சொல் ஆறு முதல் பதினான்கு வயது வரை இருபால் குழந்தை குறித்து குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி உரிமை சட்டம் 2000 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமை என 2009 ல் அழைக்கப்பட்டது. குடும்பங்கள் மற்றும் சமுதாய உறவினர்கள் ஒவ்வொரு குழந்தைகளும் தங்கள் உரிமையான தரமான கல்வி பெறுவதற்கு அரசு உதவி செய்வதற்கு அச்சட்டம் ஒரு துவக்கத்தை அளித்தது.

## குழந்தைகளின் கல்வி உரிமை

ஆறு முதல் பதினான்கு வயதான குழந்தைகள் தங்கள் வீட்டிற்கு அருகாமையுள்ள பள்ளியில் சேர்ந்து படிக்கும் உரிமையை பெற்றுள்ளனர்.

ஏந்த ஒரு குழந்தையும், எக்காரணத்திற்கும் பள்ளியில் சேர்ப்பதற்கு அனுமதி மறுக்க கூடாது. பள்ளியில் படிக்கும் குழந்தைகள் கட்டணம் செலுத்தவோ செலவுகள் செய்யவோ வேண்டியதில்லை. மாற்று திறனாளி குழந்தைகளுக்கு இலவச கட்டண கல்வி பெறுகிற உரிமை உண்டு. குழந்தைகளின் ஆரம்ப கல்வி பூர்த்தி ஆகும் வரை அரசே அனைத்து செலவுகளையும் இதன் அடிப்படையில் குழந்தைகளுக்காக கல்வி உரிமையை அரசு உறுதி செய்கிறது.

## பள்ளியை மாற்றி கொள்ளும் உரிமை

ஒரு குறிப்பிட்ட துவக்க பள்ளியில் படிக்க முடியாத சூழல் ஏற்பட்டால் பள்ளியை மாற்றி கொள்வதற்கான உரிமை உண்டு. தொடக்க கல்வியை முடிப்பதற்கு வழியில்லாத ஒரு பள்ளியில் பயிலும் ஒரு குழந்தைக்கு தனது தொடக்க கல்வியை முடிப்பதற்கும் வேறு பள்ளிக்கு மாற்றி கொள்வதற்கும் உரிமை உண்டு. தொடக்க கல்வியை முடிக்க ஒரு மாநிலத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ வேறு இடத்திற்கோ மாற்றி கேட்க உரிமை உண்டு.

## முடிவுரை

குழந்தைகள் தான் நாட்டின் செல்வங்கள் குழந்தைகளின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தலும் பாதுகாப்பிலும் அரசு முழு கவனம் செலுத்துகிறது. அதன் அடிப்படையில் கிராமம் தோறும் தொடக்க பள்ளிகளை உருவாக்கும் குழந்தைகளின் கல்வியை உறுதி செய்கிறது. குழந்தைகளுக்கான சத்தான மதிய உணவு, சீருடை, காலனி, இலவச புத்தகம், மிதிவண்டி, மடிகணினி மற்றும் பல வசதிகளை குழந்தைகளுக்கு ஏற்படுத்தி அவர்களை கல்வியில் சிறந்து விளங்க அரசு முயற்சி செய்து வருகிறது. குழந்தைகளின் கல்வி ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கேற்கிறது.

**பி. மரிய டையானா,** 9ஆம் வகுப்பு, விழுப்புரம்

# குழந்தைகள் தின விழா

## முன்னுரை

இந்தியாவின் ஒளி விளக்காகத் திகழ்ந்த மாந்தருள் மாணிக்கமான ஜவஹர்லால் நேரு பிறந்த நாளை குழந்தைகள் தினமாக நாம் கொண்டாடுகிறோம். இவ்விழா பாரத நாடெங்கும் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுகிறது.

## நேருவும் குழந்தையும்

பாரத நாட்டின் பிரதமாராகத் திகழ்ந்த நேரு அவர்கள் தம் நாட்டு மக்களிடம் பேரன்பு கொண்டிருந்தார். குழந்தைகளிடம் கொண்டிருந்த பேரன்பு அளவிட முடியாதது. இதனை உணர்த்தும் வகையில் தன் பிறந்த நாளாகிய நவம்பர் 14 - ம் தேதியை குழந்தைள் தினமாக கொண்டாட செய்தார். இவர் குழந்தைகளிடையே இருக்கும்போது தம் கவலை அனைத்தையும் மறந்து விடுவார்

## கொண்டாடும் விதம்

பள்ளி மாணவ மாணவியர் தத்தம் பள்ளிகூடங்களில் காலையில் தேசியக்கொடியை ஏற்றி வைத்துக் கொண்டாடுகின்றார்கள். விழாவிற்கு தலைமை தாங்குதல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்றவை மாணவர்கள் மேற்பார்வையிலேயே நடைபெறும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டியாக நின்று பணியாற்றி வருகின்றன

### பயன்

எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்கும் ஆற்றல் பெற்ற மாணவர்களாகிய நாம் நேருவைப்போல் விளங்கவேண்டும். பிறரிடம் அன்பு கொண்டு ஒற்றுமையுடன் நாட்டைப் பேணிக்காக்க வேண்டும். அறிவாற்றலுடன் சிறந்து விளங்க வேண்டும்.

## முடிவுரை

குழந்தைகளின் வருங்காலம் சிறப்படைய வேண்டுமெனில் நேரு போன்ற ஆன்றோர்களின் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டாக அமைய வேண்டும். எனவே நாம் இத்தகைய விழாக்களை ஒவ்வொருவரும் கொண்டாடிப் பயன்பெறவேண்டும்.

**ம. மதுமிதா,** 8ஆம் வகுப்பு, ஈரோடு

# பெண்கல்வி – பெண்கள் முன்னேற்றம்

## முன்னுரை

ஆண்டவன் மனித இனத்தைப் படைக்கும் போது ஆண், பெண் என்று இரு பிரிவாகப் படைத்தவன். ஆணுக்கும், பெண்ணுக்கும் உடலால், சில உறுப்புகளால் வேறுபாடு இருத்தலும் அவர்களின் அறிவு, ஆற்றல் பெருமைகளில் இறைவன் வேறுபாடு வைக்கவில்லை.

## பண்டைக்காலத்தில் பெண்களின் நிலை

பண்டைக்காலத்தில் பெண் கல்வி, வீரம், தேசப்பற்று, உழைப்பு, புலமை போன்றவற்றில் சிறந்து விளங்கினர். தாய்நாடு, தாய்மொழி, தாயிற் சிறந்த கோவிலிலும் இல்லை என்றான்.

“பெண்ணிற் பெருந்தக்கயாவுள” என்றார் திருவள்ளுவர்.

“அறிவும் பெருமையும் பெண் பாலன்” என்று இலக்கணம் வகுத்தனர்.

## இடைக்காலத்தில் பெண்களின் நிலை

இடைக்காலத்தில் பெண்கள் குறித்து மதிப்பிடப்படுகின்றன. ஆண்களுக்குச் சமமானவர்கள் அல்லர் என்ற கருத்து வலுப்பெற்றிருந்தது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு அவர்கள் வெளியில் வராமல் வீட்டுக்குள் அடங்கியிருந்தனர். எனவே பெண்கள் கல்வியறிவில் ஆண்களை விட குறைந்தாக காணப்பட்டனர்.

## இன்றைய பெண் கல்வியும் முன்னேற்றம்

பெண்களின் முன்னேற்றம் குடும்ப முன்னேற்றம், சமுதாயத்தின் முன்னேற்றம். இதுவே நாட்டின் முன்னேற்றம் என்று எடுத்துக் கூறுகின்றனர். பெண்களின் உயர்விற்கும் உரிமைக்கும் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

“மங்கையராய் பிறப்பதற்கே - நல்ல

மாதவம் செய்திடல் வேண்டுமம்மா”

## முடிவுரை

பெண்களின் முன்னேற்றத்திற்கு வரதட்சனைக் கொடுமை இருத்தலும். ஆதை ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஒழித்தால் தான் பெண்கள் மேலும் மேலும் முன்னேற முடியும். வாழ்க! பெண்கள்!!! வளர்க் பெண் முன்னேற்றம்!!!

”பெண்கல்வி போற்றிட

நம் தேசம் ஓங்கிட

பெண்கள் நாட்டின் கண்கள்

**கே. சரண்யா,** 7ஆம் வகுப்பு, திருப்பத்தூர்

# கவிதைகள்
## குழந்தை தொழிலாளர்கள்

அவர்கள்
சுமக்கவேண்டியது
புத்தகமூட்டையா?
புளி மூட்டையா?

அவர்கள்
பட்டத்திற்கு..
நோட்டுகளா?
திட்டுகளா?
புழுதியின் பூசலில்
சிக்கித் தவிக்கும்
இளந்நெஞ்சுகளுக்கு
மகாத்மா யார்?

சீக்கிரம் போய்
கண்ணாடியைப்பார்..!

**எம்.சீனு 8-ஆம்வகுப்பு**
**ஆவணியாபுரம்**

## நட்பு

அமைதியின் ஆழத்திற்குள்
அமிழ்ந்துக்கொண்டே இருந்தேன்

தூக்கிவிட ஒரு கரம் வேண்டும்
துயில் கொண்டாலும் நினைவு வேண்டும் - என

நட்பொன்றைத் தேடினேன்
அற்புதம்
ஆம்..
ஆமிழ்ந்து கொண்டிருந்த ” அந்த
ஆழத்திற்குள்...
அழகான முத்துப் புதையல்
என்
மனக்கண்ணை பறித்தது..!

அருகில் சென்று
அலசி எடுக்கையில்
அழகிய “நட்பொளி பிரகாசித்தது
அதன்பின் அறிந்தேன்
அம் “முத்து” என் நண்பர்கள்
என்று..!!!

**எ.ரஞ்சித்குமார் 7 ஆம் வகுப்பு**
**அன்மருதைதாய்**

## அன்பு

அன்பையும், பாசத்தையும்
பொழிந்ததை மறந்து
இப்போது..
பிள்ளை தன் தாயை
பார்த்து கேட்கும் கேள்வி
“நீ எதுக்கு என் உயிர் எடுக்குற”..

பிள்ளை வேண்டாம் - என்று
அவள் எண்ணியிருந்தால்
அன்றே..
உன்னை நசுக்கியிருக்கலாம்.

சிந்தித்துப் பார்...
இது தான் நீ கொடுக்கும்
ஆதாயமா???
உனக்கும் உன் உடலுக்கும்
வயதாகும் மறந்துவிடாதே"!!!

**டைய்சி யுவாலியா 9ஆம் வகுப்பு**
**விழுப்புரம்**

### மனிதன்

வரிகளை சுமந்தால்
கவிதை...
வருத்தங்களை சுமந்தால்
வாழ்க்கை"
கற்பனைகளை சுமந்தால்
கவிஞன்...
காயங்களை சுமந்தால்
மனிதன்...

**மரிய டைனி 9ஆம் வகுப்பு**
**விழுப்புரம்**

### யார் ஊனம்??

காது கேட்க மறுப்பின்
மண்ணில் இவர் செவிடர்...
கண்கள் காண மறுப்பின்
மண்ணில் இவர் குருடர்...
வாய் பேச மறுப்பின்
மண்ணில் இவர் ஊமை...
கை கால் இயங்காவிடில்
மண்ணில் இவர் நொண்டி..
குறையுள்ள இவர்களிடம்
உண்மையில் ஊனமில்லை..
குறைகளை குத்திக்காட்டும்
குற்றவாளிகளே ஊனமானவர்கள்..!

**மல்வின் ப்ருனோ 7ஆம் வகுப்பு**
**விழுப்புரம்**

### அகஸ்ட் 15

மூலையில் ஒதுங்கி
முனகி அழுதுக்
கொண்டிருக்கிறாள்
இந்திய அன்னை!!!
ஆம்...
கற்பு சூறையாடப்பட்ட பிறகு
ருவிக்கை கொடுக்கப்பட்ட
நினைவு தினம் அல்லவா?

**கார்த்திக் 9ஆம் வகுப்பு,**
**வேலூர்**

### தமிழ்

பாலின் வெண்மை
தேனின் இனிமை
பண்பாடு அணிகலன்
வெற்றியின் கருப்பொருள்
உறவின் பாலங்கள்
கலந்தது எங்கள் தமிழ்...
குழந்தையின் வாயில்
பாலை ஊட்டும் போது

தமிழையும்
சேர்த்து புகட்டும்
செந்நிற நாடு எங்கள்
தமிழ் நாடு...

சேர, சோழ பாண்டிய
மன்னர்களின்
தமிழ் வளர்த்த நாட்டில்
யாமும் பிறந்த விந்தை
தமிழின் பெருமை.!!

**நிஷாந்தினி 9ஆம் வகுப்பு,**
**வேலூர்**

### வாழ்க்கை

வாழ்க்கையில் யாரையும்
சார்ந்து வாழ்ந்து விடாதீர்கள்...
உங்கள் நிழல் கூட
வெளிச்சம் உள்ளவரை தான்
துணைக்கு வரும்...!!!

**சந்தியா 9ஆம் வகுப்பு,**
**திருப்பத்தூர்**

### மனிதன்

அடிக்கடி தவறு செய்பவன்
அப்பாவி...
ஒரே தவறை திரும்பத்
திரும்பச் செய்பவன்
மூடன்...
ஒரு தவறும் செய்யாதவன்
மரக்கட்டை...
தன்னையறியாமல் தவறு செய்து
தன்னையறிந்து
திருத்திக் கொள்பவனே
மனிதன்...!!!

**வாணிஸ்ரீ 7ஆம் வகுப்பு**
**திருப்பத்தூர்.**

### இழக்காதே

துன்பத்தை நினைத்து
மகிழ்ச்சியை இழக்காதே...
ஆசைகளை நினைத்து
வாழ்க்கையை இழக்காதே...
சோதனையை நினைத்து
சாதனையை இழக்காதே...
தோல்வியை நினைத்து
வெற்றியை இழக்காதே...

**கீர்த்திகா. 8ஆம் வகுப்பு**
**ஈரோடு**

### வெற்றி

வாழ்க்கையில் தோல்வி
தொடர்ந்து வந்தால்
தோற்கிறோம் - என்று
ஆர்த்தம் அல்ல...
தோல்வியைத் தாண்டி
சென்றுக் கொண்டிருக்கிறோம் - என்று அர்த்தம்...

**ரஞ்சிதா 7ஆம் வகுப்பு,**
**ஈரோடு**

## விடுகதைகள்

1.பூப்போல மகராசி காயத்துக்கும் துணையாவாள் யார் அவள்?

**பதில் : பஞ்சு**

2.நல்லதை அனுப்பிவிட்டு கெட்டதை ஒதுக்குவாள் அவன் யார்?

**பதில் : சல்லடை**

3.தீயினால் சுட்டால் சாகாதவன் தடுக்கி விழுந்தால் இறந்துவிடுவான் அவன் யார்?

**பதில் : மண்பானை**

4.போட்டால் ஒரு மடங்கு போட்டு எடுத்தால் பல மடங்கு ஆகும் அது என்ன?

**பதில் : அப்பளம்**

5.வேலி போடாத வயல், விதைத்தாலும் விளையாத வயல் அது என்ன?

**பதில் : வானம்**

**த.ஜனனி 7ஆம் வகுப்பு. அன்மருதை**

1. வானத்திலும் வாழ்வான் பூமியிலும் வாழ்வான் அவன் யார்

   **பதில் : நீர்**

2. எத்தனை பேர் ஏறினாலும் சலிக்காத குதிரை?

   **பதில் : திண்ணை**

3. கருப்பு பாயில் வெள்ளயனை் தூங்குகிறான் யார் இவன்?

   **பதில் : தோசை**

4. நம்மை அவன் தொடுவான், நாம் அவனைத் தொட முடியாது

   **பதில் : காற்று**

5. சட்டை மேல் சட்டை போட்டிருப்பான், ஆனாலும் இவனுக்கு வியர்க்காது யார் அவன்?

   **பதில் : வெங்காயம்.**

**பி.பரமேஸ்வரி, 8ஆம் வகுப்பு, திருப்பத்தூர்**

1. உள்ளே இருக்கும் போது சுறுசுறுப்பாக இருப்பான் வெளியே வந்தால் இறந்து விடுவான்?

   **பதில் : மீன்**

2. இளமையில் உயரம் முதுமையில் கட்டை அது என்ன?

   **பதில் : மெழுகுவர்த்தி**

3. அடிப்பாதை இருக்கும் கால் இருக்காது அது என்ன?

   **பதில் : நத்தை**

4. வெள்ளையாக இருப்பான், பால் அல்ல விசே'நாட்களில் வீட்டை பள பளப்பாக்குவான்?

**பதில் : சுண்ணாம்பு**

5. கை உண்டு பிடிக்க முடியாது கால் உண்டு நடக்க முடியாது?

**பதில் : நாற்காலி**

**பி.சங்கர், 7 ஆம் வகுப்பு, வேலூர்**

1. நாக்கு இல்லாதவன் நல்லது சொல்வான்?

**பதில் : புத்தகம்.**

2. கை இல்லாமல் நீந்துவான் கால் இல்லாமல் ஓடுவான்?

**பதில் : படகு**

3. இணைபிரிய மாட்டார்கள். நண்பன் இல்லை ஒன்றுசேர் மாட்டார்கள். பகைவர்கள் இல்லை?

**பதில் : நட்சத்திரம்**

4. பேசிக்கொள்ளலாம் பார்த்துக் கொள்ள முடியாது பார்த்துக் கொள்ளலாம் பேசிக்கொள்ள முடியாது?

**பதில் : தொலைபேசி, புகைப்படம்.**

5. அன்றாடம் தீப்பிடிக்கும் அழியாத மாளிகை அது என்ன?

**பதில் : அடுப்பு**

**ச.அந்தோணி ராஜ், 8ம் வகுப்பு மைகேல்புரம்.**

1. அன்றாடம் வருவான் அனைவருக்கும் சொந்தக்காரன் அவன் யார்?

**பதில் : உறக்கம்.**

2. கடமை வீரன் காக்கிச் சட்டை அணிய மாட்டன் அவன் யார்?

**பதில் : நாய்**

3. மாடவனுக்கு மந்திரம் போட்டால் மறுபடியும் உயிர் வரும் அவன் யார்?

**பதில் : அடுப்புக்கரி**

4. அவன் சத்தம் ஓய்வதில்லை. அவன் ஓய்ந்தால் சத்தமில்லை அவன் யார்?


**பதில் : இதயம்**

5. அனல் மேல் கறுப்புக்குதிரை அதன் மேல் வெள்ளைய்ன ஏறிக் குதிக்கிறான் அது என்ன?


**பதில் : உலை பாணை**


**ஐ.சஞ்சய் 8ஆம் வகுப்பு,ஈரோடு.**

தயவு செய்து எனக்கு வழி காண்பியுங்கள்



என்னை உருவாக்குங்கள் பார்க்கலாம்





இப்படத்தில் உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்

# கல ஆய்வு

என் பெயர் கலையரசி. நூன் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மேல் சிசமங்கலம் என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். மாலை நேர வகுப்பில் தவறாமல் கலந்து கொள்வேன். அருகிலுள்ள அரசு உயர்நிலைப்பளியில் பயின்று 12ஆம் வகுப்பில் 1116 மதிப்பெண்கள் எடுத்து தேர்வில் வெற்றிபெற்றேன். தற்போது சென்னையில் உள்ள அரசு சட்டக் கல்லூரியில் 3ம் ஆண்டு பயின்று வருகிறேன். நான் இந்த அளவிற்கு உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் தன்னம்பிக்கையுடனும் செயல்பட வழிவகை செய்தது. சலேசிய கன்னியர்களின் தூண்டுதலினாலும் வழிகாட்டினாலும் நான் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஓவ்வொரு நாளும் போட்டிகள், பயிற்சிகள் என அறிவுபூர்வமான செயல்பாட்டினால் முழுமையாக பங்கு பெற்று நினைத்திலும் அறிவிலும் நற்பண்புகளிலும் வளர்த்தெடுத்த அருட்சகோதரிகளுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்பெயர் விக்னேஷ் நான் அன்மருதை காலனியில் வசித்து வருகிறேன். எங்கள் கிராமத்திலும் மாலை நேர வகுப்பு மையம் செயல்பட்டு வருகிறது. நானும் அருகிலுள்ள அரசுப் பள்ளிகளில் பயின்று தற்போது என்ஜினியராக உள்ளேன். தினந்தோறும் தவறாமல் மாலை நேர வகுப்பிற்கு வந்து விடுவேன். பள்ளியில் நடத்தும் பாடத்தினை படித்து எழுதி காண்பிப்பேன். தேரியாதவற்றை கேட்டு தெரிந்து கொள்வேன். அனைத்து செயல்பாடுகளிலும் பங்கு பெறுவேன் எனக்கு ஏதெனும் பிரச்சனை என்றால் உடனே ஆசிரியரிடமும் அருட்சகோதரிகளிடமும் பகிர்ந்து கொண்டு ஆலோசனை பெறுவேன். அவர்கள் கொடுத்த ஊக்கத்தினாலும் குடும்ப சூழல் காரணமாக முழு மூச்சாக கல்வியைப் பயின்று நல்ல முன்னேற்றத்தில் இருக்கிறேன். என்னுடைய குடும்ப பொருளாதாரமும் உயர்ந்திருக்கிறது. என்னை இந்த சமூகத்தில் ஒரு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்க பயிற்சி கொடுத்த அருட்சகோதரிகளுக்கு என்னுடைய சிறப்பான மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் பாராளுமன்றத்தின் பெயர் புனித டொமினிக் குழந்தைகள் பாராளுமன்றம், ஆவணியாபுரம் கிராமத்தைச் சேரந்த 15 மாணவிகள் ஒருங்கிணைந்து கிராமத்தின் முழு வளர்சிக்கும் தூய்மைக்கும் சமூகத்தை உருவாகவும் இந்த பாராளுமன்றத்தை அமைத்து நாங்களே தேர்ந்தெடுத்து எங்களது பணிகளை செவ்வனே செய்து வருகிறோம். எங்கள் கிராமத்தில் தெரு விளக்கு எரியவில்லை. எனவே பணம் வசூலித்து தெரு விளக்கு வாங்கிபோட்டோம். வாரத்திற்கு ஒரு முறை தெருக்களை சுத்தம் செய்து சுண்ணாம்பு போட்டு தூய்மையாக இருக்க உதவி செய்தோம். துப்புறவு பணியாளரை சந்தித்து கொசு மருந்து அடித்துள்ளோம். சுற்றுசூழல் தினத்தை கொண்டாடி சாலையோர தெருக்களில் மரங்களை நட்டு தூய்மையான காற்றும், நிழலும் பெற வழிவகை செய்து அவ்வப்போது வருகின்ற முக்கிய தினங்களை சிறப்பித்து குறிப்பாக உலக எழுத்தறிவு தினம் பெண் குழந்தைகள் தினம், விழிப்புணர்வு பேரணியை 8.9.2017 அன்று சிறப்பித்து அரசுப் பள்ளியிலிருந்து முக்கிய சாலை வழியாக எழுச்சி எழுப்பி விழிப்புணர்வு கொடுத்தோம் எங்களை இவ்வாறு தன்னம்பிக்கையோடும், எங்களது உணர்வுகளையும் தட்டியெழுப்பி


மாணவக் கண்மணிகளாகிய நாங்கள் எங்கள் திறமைகளை நல்வழியில் செலுத்தவும், மனித நேயத்தோடும், சமூக உணர்வோடும் வழிநடத்தி செயல்படுத்த உருதுணையாக இருந்த எங்கள் அன்மருதை இல்ல அருட்சகோதரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்தக்கொள்கிறோம்.



# குழந்தைகளின் வரைபடங்கள்




A. சவரிமுத்து
6-ஆம் வகுப்பு-விழுப்புரம்




M. பிரசாந்
11-ஆம் வகுப்பு-வேலூர்




S. வாணி
6-ஆம் வகுப்பு - விழுப்புரம்



V. மதுமிதா
3-ஆம் வகுப்பு-திருப்பத்தூர்




R. ரோஸ்லின்
7-ஆம் வகுப்பு-ஈரோடு



P. கார்த்திக்
5-ஆம் வகுப்பு-திருவண்ணாமலை

# குழந்தைகளின் வரைபடங்கள்



M. மீனா
7-ஆம் வகுப்பு-ஈரோடு



B. கிருஷ்ண மூர்த்தி
8-ஆம் வகுப்பு-ஈரோடு




A. தணிகைமலை
8-ஆம் வகுப்பு-திருவண்ணாமலை



A. குரு மூர்த்தி
6-ஆம் வகுப்பு-திருவண்ணாமலை




T. பவித்ரா
8-ஆம் வகுப்பு-திருவண்ணாமலை



R. மெட்டில்டா
9-ஆம் வகுப்பு-விழுப்புரம்

# குழந்தைகளின் வரைபடங்கள்



C. பானுப்பிரியா
8-ஆம் வகுப்பு-திருப்பத்தூர்




S. புவனேஷ்வரி
8-ஆம் வகுப்பு-ஈரோடு




A. யேசுதாஸ்
7-ஆம் வகுப்பு-விழுப்புரம்



A. மேரி ஜெனிபர்
6-ஆம் வகுப்பு-விழுப்புரம்



V. சபரிவாசன்
2-ஆம் வகுப்பு-திருவண்ணாமலை




அசோக்
8-ஆம் வகுப்பு-வேலூர்